MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# குறிஞ்சிப்பாட்டில் பண்பாட்டுக்கூறுகள்

திருமதி மா.முத்து காயத்ரி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி.
muthugayathri-tam@sfrcollege.edu.in

# Cultural Elements in Kurinjippaatu

**Mrs. M. Muthu Gayathri,**
**Assistant Professor,**
**Department of Tamil**
**Standard Fireworks Rajaratnam College for Women**
**Sivakasi**
muthugayathri-tam@sfrcollege.edu.in

## ABSTRACT

Literature functions as a vital repository that documents and preserves the evolutionary trajectory of societies across time. As historical contexts shift, cultural practices and traditions also undergo transformation, with some communities even distancing themselves from their heritage. In contrast, the ancient Tamils accorded great significance to cultural values and social customs, a fact well attested in their literary corpus.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

The Sangam literature, which emerged around the 5th century BCE, provides profound insights into the socio-cultural life of the Tamil people. Among these works, Kurinjippaatu occupies a distinctive position, encapsulating diverse cultural dimensions such as customs, dietary practices, belief systems, and recreational activities. This paper seeks to critically examine and interpret the cultural components embedded within Kurinjippaatu, thereby contributing to a deeper understanding of the lived realities of ancient Tamil society.

## ஆய்வுச்சுருக்கம்

இலக்கியங்கள் காலச்சூழலின் வளர்ச்சிப் பரிணாமத்தை பதிவுசெய்துப் பாதுகாக்கும் பெட்டகமாகும். கால மாற்றத்திற்கேற்ப மக்களும் அவர்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களும் மாறிக்கொண்டு தான் வருகின்றன. சிலர் பண்பாட்டினையே மறந்து வாழ்ந்துக் கொண்டு தான் இருக்கின்றனர். ஆனால் நம் பழந்தமிழரின் வாழ்வியலில் பண்பாடு, பழக்கவழக்கங்கள் பெரிதும் மதிக்கப்பட்டும் கடைப்பிடிக்கப்பட்டும் வந்துள்ளதை அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் மூலம் உணரலாகின்றது. அவ்வகையில் கி.மு.500 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியலைப் பறைச்சாற்றுகின்றன. சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் பொதிந்துள்ள பண்பாட்டுக்கூறுகளான பழக்கவழக்கங்கள், உணவுமுறைகள், நம்பிக்கைகள், பொழுதுபோக்குகள் முதலியவற்றை எடுத்தியம்புவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## பண்பாடு – விளக்கம்

பண்பாடு என்பதற்கு ‘பண்படுதல்’,‘சீர்படுத்தல்’,‘திருத்தல்’ என்று பொருள் உண்டு. சமூகத்தில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனையும் நல்முறையில் ஒழுங்குப்படுத்துவது ‘பண்பாடு’ ஆகும். பண்பாட என்பது வாழ்க்கைமுறையாகும். ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு பண்பாட்டுக் கலாச்சாரம் உண்டு. **“பண்பாடானது இசை, இலக்கியம், ஓவியம், வாழ்க்கைமுறை, உணவுமுறை, நாடகம், சிற்பம், திரைப்படம் போன்ற மனிதனுடைய கலைப்பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றன.”**[1] என்று பண்பாடு குறித்து விளக்கமளிக்கிறார், எட்வார்ட் டெயிலர்.

பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் தங்களின் வாழ்க்கைத் தேவைக்களுக்காக செய்துக் கொள்ளும் அனைத்து வகையானப் பொருட்களும், பொருள்சார்

பண்பாட்டில் அடங்கும். மக்களின் பொருள் வடிவம் பெறாத கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் முதலியன பொருள் சாரா பண்பாட்டில் அடங்கும்.

## குறிஞ்சிப்பாட்டு

சங்க இலக்கியமான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் செவ்வியல் இலக்கியமாக இணைந்தவையாகும். பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகக் குறிஞ்சிப்பாட்டு இடம் பெற்றுள்ளது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

இந்நூல் ஆரிய அரசன் பிரகத்தன் என்பவருக்குத் தமிழின் பெருமை உணர்த்துதல் பொருட்டு கபிலரால் இயற்றப்பட்டது. 261 அடிகளை உடையதும் ஆசிரியப்பாவினாலானதும் ஆகும். குறிஞ்சித்திணைப் புணர்தலை உரிப்பொருளாகக் கொண்டது. தமிழரின் அகவாழ்வானக் களவும் கற்பும் பற்றி இந்நூல் விரிவாக விவரிப்பதால் இதனைப் பெருங்குறிஞ்சி என்றும் அழைப்பர்.

### குறிஞ்சிப்பாட்டில் பண்பாட்டுக்கூறுகள்

குறிஞ்சிப்பாட்டில் உள்ளடக்கமாக உள்ள பண்பாட்டுக்கூறுகளான, இறைநம்பிக்கை, சூளுரை நம்பிக்கை, அறத்தொடு நிற்றல், விருந்தோம்பல் பண்பு, தினைப்புனம் காக்கும் பணி போன்றவைப் பழந்தமிழரின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்துள்ளன.

### இறை நம்பிக்கை

சங்க காலம் தொடங்கி, இக்காலம் வரை இறைவனின் மீது நம்பிக்கை வைப்பது என்பது மாறவில்லை. ஏனெனில் ‘அவனின்றி ஓர் அணுவும் அசையாது’ என்பதே உண்மை. தமிழ்க்கடவுள் முருகனின் பக்தர்கள், மலையே குலைந்தாலும் வானமே இடிந்தாலும் பூமியே பிளந்தாலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையோடு, முருகனே தண்டையணிந்த உன் அழகிய திருவடிக் கோலத்தை எப்போதும் நம்பிக்கையோடுத் தொழுது வாழ்வர். அத்தகையைக் குறிஞ்சி நிலக்கடவுளைக் குறிஞ்சிப்பாட்டுத் தலைவன் தன்னுடையக் களவு வாழ்க்கை, கற்பு வாழ்க்கையாக மாற வேண்டும் எனத் தொழுது வணங்குவதை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“......பிறங்கு மலை**
**மீ மிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது”[2]** என்ற வரிகள் விளக்குகின்றன.

**விருந்தோம்பல் பண்பு**

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் மிகச்சிறந்தப் பண்பாகும். பழந்தமிழர்கள் தம் வீட்டிற்கு வந்த புதியவர்களுக்கு உணவுக் கொடுத்து அவர்க்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து மகிழ்த்து தான் வழியனுப்பினர்.

**“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.”[3]** என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, குறிஞ்சிப்பாட்டில் தலைவன் தலைவியின் மீது அதிகம் விருப்பம் கொண்டுள்ளதைப் புலப்படுத்த, நம் களவு கற்பில் முடியும் என்பதையும் நாம் இல்லற வாழ்வு மேற்கொண்டு, விழாக் கொண்டாடினாற் போல் பெரிய பானையில் சோறு சமைத்து, நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று, அளவில்லாமல் நெய் நிறைந்த உணவினை விருந்தாகப் படைத்து அவர்கள் உண்டப் பின் மிஞ்சியிருக்கும் உணவினை உன்னுடன் இணைந்து உண்ண வேண்டும் எனக் கூறி மகிழ்ந்ததை,

**“சாறு அயர்ந்தன்ன மிடாஅச் சொன்றி**
**வருநர்க்க வரையா வளநகர் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலர் உண...**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில், பெருந்தகை**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**நின்னோடு உண்டலும் புரைவது"**[4] என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

**சூளுரை நம்பிக்கை**

பண்டையக் காலத்திலிருந்து மக்களிடம் பலவகையான நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. என்ன நடக்கும் என்று அறியாத நிலையில் மனிதவாழ்வு நம்பிக்கையைப் பற்றிக் கொள்கிறது. இந்நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு காக்கப்படுகின்றன. **"நம்பிக்கை என்பது பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும்"** [5]

சூளுரைத்தல் என்பதற்கு உறுதிமொழி கொடுத்தல், சபதம் செய்தல் என்றுப் பொருள். இவ்வழக்கம் மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளுள் ஒன்றாகும்.

ஒருவர் தாம் கூறும் செயலின் மீது பிறர்க்கு நம்பகத் தன்மை உண்டாக்க சூளுரைத்தல் வழக்கம். மெய் தொட்டும், அரசனடி தொட்டும், திருமாலடித் தொட்டும், கடல்நீர் நோக்கியும் சூளுரைச் செய்தல் வழக்கம் இருந்தது. அவ்வகையில் குறிஞ்சிப்பாட்டில் தலைவியை மகிழ்விப்பதற்காகத் தலைவன் தலைவியைப் கைவிடமாட்டேன், நாடறிய உனை மணப்பேன் என்பதற்குச் சாட்சியாகக் குறிஞ்சிக்கடவுளான முருகனை வணங்கி, இனிய நீரைக் குடித்து சத்தியம் செய்து நம்பிக்கை ஏற்படுத்துவதை,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

**“மீ மிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது**
**ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி,**
**அம் தீம் தெள் நீர் குடித்தலின்…”[6]** என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**அறத்தொடு நிற்கும் மரபு .**

அறத்தொடு நிற்றல என்பது பண்டையக் களவு வாழ்வில் இடம் பெறும் முதன்மையான மரபாகும். தலைவன் தலைவியின் களவு வாழ்வு சுற்றதார்க்குப் புலப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியாகும். இதனை நாற்கவிராச நம்பி அகப்பொருள் விளக்கத்தில்,

**“ஆற்று ஊர் அஞ்சினும் அவன்வரைவு மறுப்பினும்**
**வேற்று வரைவு நேரினும் காப்புக்கை மிகினும்**
**ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே”[7]**

அறத்தொடு நிற்றலில் முதன்மை வகிப்பது தோழி. தலைவியின் தோழி தான் தலைவியின் களவு வாழ்வை செவிலியிடம் தெரிவிப்பாள். செவிலி நற்றாயிடமும் நற்றாய் தலைவியின் தந்தை தமையனிடமும் தெரிவிப்பாள். இது தான் முறையும் கூட.

**“அன்னாய் வாழி! வேண்டு அன்னை, ஒண்ணுதல்**
**ஒலி மென் கூந்தல் என் தோழி மேனி**
**விறல் இழை நெகிழ்ந்த வீவு அரும் கடுநோய்”[8]** என்று தோழி செவிலியிடம் தலைவியின் மாறுபாடுகளைக் கூறி அறத்தொடு நிற்பதை அறியமுடிகிறது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## தினைப்புனம் காக்கும் பணி

தினைப்புனம் காத்தல் என்பது குறிஞ்சி நிலமக்கள் தினை விளையும் வயல்வெளியைக் கிளி போன்ற பறவைகளிடமிருந்து ஓசை எழுப்பி பாதுகாக்கும் பணியாகும். இது உணவு உற்பத்தியில் சங்க கால மக்களின் ஈடுபாட்டைப் புலப்படுத்துகிறது. இப்பணியில் பெரும்பாலும் தலைவியும் அவளின் தோழியும் தான் மேற்கொள்வர்.

**"நல்கோள் சிறு தினைப் பட புள் ஓப்பி...**
**தழலும் தட்டையும் குளிறும் பிறவும்**
**கிளி கடி மரபின ஊழ்ஊழ் வாங்கி..."**[9] என்ற குறிஞ்சிப்பாட்டின் அடிகள் தலைவியும் தோழியும் இசைகருவிகள் மூலம் இசை எழுப்பி தினைப்புனம் காத்ததை அறியமுடிகிறது.

## தொகுப்புரை

சங்க இலக்கியமான குறிஞ்சிப்பாட்டில் இறைநம்பிக்கை, சூளுரைக்கும் வழக்கம், விருந்தோம்பல் பண்பு, அறத்தொடு நிற்கும் மரபு மற்றும் தினைப்புனம் காக்கும் பணி போண்ற பண்பாட்டுக் கூறுகள் பொதிந்துள்ளதை இவ்வாய்வுக் கட்டுரை எடுத்தியம்புகின்றது.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume: 4 /Issue 4 / September 2025 E-ISSN 3049-3676 (Online)

## சான்றெண் விளக்கம்

1. எட்வார்ட் டெயிலர், பண்பாடும் மானிடவியலும்.
2. குறிஞ்சிப்பாட்டு, பாடலடி : 208-209
3. திருவள்ளுவர், திருக்குறள், 90.
4. குறிஞ்சிப்பாட்டு, பாடலடி : 208-209
5. சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, பக்.188
6. குறிஞ்சிப்பாட்டு, பாடலடி : 209-211
7. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், அகத்திணையியல்:47
8. குறிஞ்சிப்பாட்டு, பாடலடி : 1-3
9. குறிஞ்சிப்பாட்டு, பாடலடி : 39-44